1981 மார்ச் 7]

[324 ஆம் பக்கத்தில் இனம் 4 (2)-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

சென்னை கடற்கரைச்சாலையில் உள்ள வென்லக் பூங்கா பொதுப்பணித் துறையினைச் சார்ந்தது. இதை தமிழ்நாடு பாரத சாரண சாரணீய இயக்கத்திற்கு வாடகையின்றி 1925 ம் ஆண்டு முதல் பொதுப்பணித்துறை குத்தகைக்கு விட்டிருந்தது. பொது (தகவல் மற்றும் மக்கள் தொடர்பு) துறை, நிதி அமைச்சரின் ஆணைக்கேற்ப மேற்படி இடத்தில் பெரியார் மாநாட்டுக் கூடம் அமைப்பதற்கு உத்தேசித்துள்ளதாகவும் அதற்கான ஏற்பாடுகளை மேற் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தது. மேற்படி மனையில் பெரியார் மாநாட்டுக் கூடம் கட்டினால் சாரண இயக்கத்தின் முன்னேற்றத்தில் தடை ஏற்படும் என்று கருதி இம்முயற்சியை கைவிட்டு மாநாட்டுக்கூடத்தை கீழ்க்கண்ட இடங்களில் ஏதாவது ஒன்றில் அமைக்குமாறு இத்துறை பொது (தகவல் மற்றும் மக்கள் தொடர்பு) துறையினரை கேட்டுக் கொண்டுள்ளது.

1. அண்ணா சதுக்கத்தின் வடபுறமிருக்கும் அண்ணா படகு மன்றத்திற்கும், சுராங்கணி சிற்றுண்டி கட்டிடத்திற்குமிடையில் உள்ள 3 ஏக்கர் நிலப் பரப்பு.

2. ராணி மேரி கல்லூரியின் பழைய விடுதிக்கட்டிடத்தின் வடபுறமிருக்கும் 3 ஏக்கர் மனை.

3. வள்ளுவர் கோட்டத்தினருகில் உள்ள பெரிய இடம். பெரியார் மாநாட்டுக்கூடத்தை வேறு சில இடங்களில் அமைக்கலாமா என யோசித்து வருவதால் வென்லக் பூங்காவில் இயங்கிவரும் சாரண இயக்கத்தினர் அதிருப்தி ஏதும் கொள்ளத் தேவையில்லை.

சத்யமேவ ஜயதே வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS